ஈழத்தமிழா இனியும் உறங்காதே
உன்னினம் அழியுது நீயும் தூங்காதே 2
உந்தன் உணர்வையும் உறுதியையும் 2
நீ என்றென்றும் தளராதே 2
உன்னினம் காக்க எழுந்திடடா

ஈழத்தமிழா இனியும் உறங்காதே

எம்மின மக்களை அழித்திட என்று பற்பல படைகள் வந்தனரே ஏ .. 2
சரித்திரம் படைக்கும் விடுதலைப்புலிகள் படைகளை எதிர்த்து நின்றனரே 2

ஈழத்தமிழா இனியும் உறங்காதே

களத்தின் நடுவில் பிணத்தின் குவியல் கண்டும் நீயும் அஞ்சாதே ஏ.. 2
அலை கடல் போல படை வந்தாலும் தடைகளை அறுவடை செய்வாயே 2

ஈழத்தமிழா இனியும் உறங்காதே

கடைசித் தமிழன் உள்ள வரைக்கும் களத்தில் நின்று போராடு 2
தமிழனின் குருதியில் படைத்த ஈழமென்று உலக சரித்திரம் சொல்லும் 2

ஈழத்தமிழா இனியும் உறங்காதே

அண்ணன் பிரபாகரனிருக்க
அவன்வழியே நீ பிறந்திடடா
எதிரியின் பாசறை தெரியுதடா
எழுந்து நீ அதை ஏழத்திடடா 3